சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 5099/அ5/2022 நாள்.03.08.2022.

பொருள் பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் – Anandham Youth Foundation – அரசு/அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகள் 12 ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாணவர்களின் உயர்கல்விக்கு உதவுதல் – மாணவர்களின் விவரங்கள் கோருதல் – அனுப்புதல் – சார்ந்து.

பார்வை 1 சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண். 036785/எம்/இ2/2022, நாள். 24.06.2022.

2 சென்னை-24, திரு.எஸ்.செல்வகுமார், நிறுவனர் ஆனந்தம் இளைஞர் நல அமைப்பு கடிதம் நாள். 05.04.2022.

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகளின்படி அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் 12ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாணவர்களின் உயர்கல்வி உதவுவதற்காக ஆனந்தம் யூத் பவுன்டேசன் என்ற அமைப்பினர்கள் உதவியுள்ளனர்.

எனவே அரசு/அரசு உதவி பெறும் பள்ளித் தலைமையாசிரியர்கள் 12ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று உயர்கல்வி பயில இயலாத பொருளாதார நிதியாக மிகவும் பின்தங்கிய மாணவ/மாணவியர்களுக்கு 100% கல்வி உதவித் தொகையுடன் உயர்கல்வி வழங்க உள்ளனர். எனவே அரசு/அரசு உதவி பெறும் பள்ளித் தலைமையாசிரியர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் மாணவர்களின் விவரங்கள் 20.08.2022 அன்றுக்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இணைப்பு: படிவம்

ஒம்/-

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

அனைத்து அரசு / அரசு உதவி பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,

சென்னை மாவட்டம்.

நகல்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.